Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 52 | thalaivaasaltv@gmail.com | செவ்வாய்க்கிழமை நவம்பர் 24, 2020



## அச்சுறுத்தும் நிவர் சூறாவளி!

### 36 மணித்தியாலங்களுக்கு கடும் மழை நீடிக்கும்



வங்களா விரிகுடாவின் தென்மேற்கு பகுதியில் காங்கேசன்துறை கரையின் கிழக்கில் சுமார் 290 கிலோ மீற்றர் தொலைவில் நிவர் சூறாவளி நிலை கொண்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது மேலும் தீவிரமடைந்து, பலத்த சூறாவளியாக மாற்றமடையக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் 36 மணித்தியாலங்களில் வடமேற்கு திசையை நோக்கி நகர்வதுடன் தமிழக கரையை ஊடறுத்து செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் வடக்கு மற்றும் கிழக்கு கடற்பிராந்தியங்களில் ஆழமான மற்றும் ஆழமற்ற பகுதிகளில் திடீரென மணித்தியாலத்திற்கு 80 முதல் 100 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

03

## போர்க் குற்றம் நடக்கவில்லை என்றால்
# விசாரணைக்கு ஏன் அச்சம்?

### கஜேந்திரகுமார் கேள்வி



“இராணுவம் தவறாக எதனையும் செய்யவில்லை என்பதில் உங்களுக்கு நம்பிக்கையிருந்தால் சர்வதேச விசாரணை ஒன்றை நீங்கள் ஏன் ஏற்றுக் கொள்ள முடியாது? எதற்காக நீங்கள் அஞ்சுகின்றீர்கள்? அப்படி அதுவும் இடம்பெறவில்லை என்பதை நிரூபியுங்கள்” என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட எம்.பி.யுமான

03

## பிணையில் விடுதலையானார் பிள்ளையான்

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

03

## ஜனாதிபதி கோட்டாவிற்கு யாழ். நீதிமன்றம் விடுத்த அழைப்பாணை இரத்து



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவிற்கு யாழ் நீதிமன்றம் விடுத்த அழைப்பாணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் இரத்து செய்துள்ளது.

03

## பொலிஸ் கொத்தணி 1,039 சிறைச்சாலை கொத்தணி 717

இதுவரை 1,039 பொலிஸாருக்கு கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக, அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 238 அதிரடிப்படையினர் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் இருந்து பதிவான மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 717 ஆக உயர்வடைந்துள்ளது.

கொழும்பை அண்டிய சிறைகளில்

03

## கிளிநொச்சி முதியவருக்கு தொற்று குடிதண்ணீர் போத்தல்கள் விநியோகிப்பவர்கள் காரணமா?

கிளிநொச்சியில் நேற்று அடையாளம் காணப்பட்ட வயோதிபருக்கு கோரோனா வைரஸ் தொற்று ஏற்படுவதற்கு குடிதண்ணீர் போத்தல்கள் விநியோகத்தில் ஈடுபடும் பணியாளர்கள் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

நாட்டில் கோரோனா வைரஸ் பரவல் அதிகமாகக் காணப்படும் மேல் மாகாணத்துக்குச் சென்று குடிதண்ணீர் போத்தல்களை எடுத்து வந்து கிளிநொச்சி மாவட்டத்தில் விநியோகிக்கும் முகவர் நிறுவனத்தைச் சேர்ந்தோருக்கு பிசிஆர் பரிசோதனையை முன்னெடுக்க சுகாதாரத் துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தற்போது தென்னிலங்கையில் இருக்கும் முகவர் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களை கிளிநொச்சிக்குத் திரும்புமாறு இன்று சுகாதாரத் துறையினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

03

## தெற்கிலிருந்து வந்தவர் யாழில் சடலமாக மீட்பு!




யாழிலில் இயங்கி வரும் உணவகம் ஒன்றில் இருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் பணியாற்றும் நபர் உணவகத்தில் தங்கியிருந்த வேளை உயிரிழந்துள்ளார். குறித்த நபர் மூன்று தினங்களுக்கு முன்னரே கொழும்பில் இருந்து வருகை தந்திருந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் சடலம்

03

## இன்று பிற்பகல் வரை 287 பேருக்கு கொரோனா



இலங்கையில் மேலும் 287 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த அனைவரும் பேலியகொடை நோயாளர்கள் உடன் நெருங்கிப் பழகியவர்கள் என இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய மினுவங்கொடை மற்றும் பேலியகொடை கொத்தணியில் கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 17,265 ஆக அதிகரித்துள்ளது.



# தரம் 5 புலமைப்பரீட்சை வெட்டுப்புள்ளி அதிகரிப்பால் மாணவர்கள் கடும் பாதிப்பு




தரம் 5 புலமை பரீட்சை வெட்டுப்புள்ளி அதிகரிப்பு காரணமாக மாணவர்கள் கடும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர் இது தொடர்பாக கல்வி அமைச்சர் ஜி எல் பீரிஸ் அவர்களுக்கு அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார். மேலும் கடிதத்தில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

புலமைப் பரீட்சையில் தோற்றியவர் தேர்ச்சி பெற்றவர் தேர்ச்சி பெறாதவராயினும் வெட்டுப்புள்ளிகளைவிட குறைந்த புள்ளிகளைப் பெற்ற பிள்ளைகள் சித்திபெறாதவர்கள் தோற்றப்பாட்டின் காரணமாக கூடிய புள்ளிகள் பெற்றும் தேர்ச்சி அடையாதவர்கள் என்ற வகைக்கு உட்பகுத்தப்படும் மாணவர்கள் மிகக் கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாவதோடு அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது சம்மந்தமாகவும் உங்களது அவதானத்தினைச் செலுத்துமாறு கேட்கிறோம்.

இம்முறை புலமைப் பரீட்சையில் பல மாவட்டங்களில் கூடிய வெட்டுப் புள்ளியாக169 ஐ உயர் மதிப்பெண்ணாகக் குறிப்பிடுவதன் காரணமாக வினாத்தாளில் 84மூ புள்ளிகள் பெற்ற பிள்ளைகளும் புலமைப் பரீட்சையில் தேர்ச்சி பெறாதவர் என்ற நிலையில் பார்க்கப்படுவது மனிதாபிமானமற்ற செயற்பாடு இவ்வாறான மாணவர்களின் மனநிலையைப் புரிந்துகொண்டு செயற்படவேண்டும் நாட்டின் கல்வித்துறையில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தான்னிச்சையான முடிவுகளால் பிள்ளைகளை மன உளைச் சலுக்கு உட்படுத்துவதனை நாம் தெரியப்படுத்துகிறோம்.

இங்கே பிள்ளைகளை மன உளைச்சலுக்கு உட்படுத்தாமல் அவர்கள் இந்தப் பரீடாசையில் பெற்ற பெறுபேறுகளுக்கு அமைய மாற்று வழியில் அவர்களுக்கான ஆறுதலைப் பெற்றுக் கொடுப்பதற்கான முறைகள் இருக்கும்போதும் கல்வி அமைச்சும் நடப்பு அரசாங்கமும் அவற்றைப் புறந்தள்ளிச் செயற்படுவது வருத்தப்பட வேண்டிய விடயமாகும்.

மேலும் மாணவர்கள் நாட்டில் தொடரும் மிகவும் கடினமான சூழ்நிலையில் கொரோனா நோயின் ஆபத்தினை எதிர்கொண்டுதான் இந்த நிலைமையை வெளிக்காட்டியுள்ளார்கள். என்பதனை இந்த அரசாங்கத்துக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் அது தொடர்பாக விரிவாக விவரித்துக் கூறவேண்டிய அவசியமில்லை.

எது எவ்வாறாயினும் நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சி தொடர்பாக செயற்படுத்தப்பட்ட நிகழ்நிலை(ழுடெநை) கற்பித்தலின் ஊடாக யதார்த்தமற்ற நடைமுறைச் சாத்தியமற்ற செயற்பாடுகள் வெற்றியளிக்கவில்லை என்பதனை கல்வி அமைச்சும் அரசாங்கமும் இந்த நிலைமைகளின் மூலம் விளங்கிக்கொள்ள முடியும்.

எனவே மேலும் இந்த மாணவர்கள் எதிர்காலத்தில் கல்விச் சவால்களுக்கு முகம்கொடுத்து மனோதிடத்தினைச் சீர்குலைக்கும் செயற்பாட்டினை மேற்கொள்ளாமல் மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் புலமைப் பரிசில்களின் அளவை அதிகரித்து மேற்குறிப்பிட்ட அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு நீயாயத்தைப் பெற்றுக் கொடுக்கும்படி இலங்கை ஆசிரியர் சேவைச்சங்கம் சார்பில் நாம் உங்களிடம் மிகவும் தேவைப் பாட்டோடு கேட்டுக் கொள்கிறோம்.



## தினம் ஒரு ஆரோக்கிய தகவல்-6

### டெங்கு காய்ச்சல்

டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளினால் தடுக்கப்படக் கூடிய தொற்றுநோயாகும்.

நோயைப் பரப்பும் காவியான ஈடிஸ் நுளம்பின் பெருக்கத்தையும், கடிப்பதனையும் கட்டுப்படுத்துவதன் மூலம் பாதுகாப்பாக இருக்கலாம்.

### தடுக்கும் முறைகள்

- நுளம்பு பெருகக் கூடிய நீர் தேங்க கூடிய இடங்களை அழித்தல்.
- நுளம்பு கடிப்பதனை தடுக்க நுளம்பு வலைகள், கைகள் கால்களை மூடும் வண்ணம் ஆடை அணிதல், நுளம்பு கடிக்காமல் நுளம்புகளை விரட்டக்கூடிய நுளம்பு திரி, ரிப்பலன்சை பயன்படுத்தல்.

**வைத்திய கலாநிதி கோ. றஜீவ்**

## கொரோனா உயிரிழப்பு 90ஆக அதிகரிப்பு

நாட்டில் மேலும் மூவர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 60 மற்றும் 86 வயதுடைய இரு பெண்களும் 60 வயதுடைய ஆணொருவரும் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 90ஆக அதிகரித்துள்ளது.

## சுழிபுரத்தில் குண்டுகள் மீட்பு

யாழ்ப்பாணம் சுழிபுரம் சவுக்கடி மீன் பிடி துறைமுகத்திற்கு செல்லும் பாதைக்கு அருகில் இருந்து இரு குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

விவசாய நடவடிக்கைக்காக காணியை துப்பரவு செய்யும் போது குண்டுகள் வெளிப்பட்டதை அடுத்து அது தொடர்பில் மக்களால் கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டது.

கடற்படையினர் பொலிசாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து பொலிசார் அவ்விடத்திற்கு வந்ததை அடுத்து இரு குண்டுகளும் மீட்கப்பட்டன.

குறித்த காணி உள்ளிட்ட பகுதியில் கடந்த காலங்களில் கடற்படையினரின் முகாம் அமைந்திருந்தது எனவும் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே மக்களிடம் அப்பகுதி கையளிக்கப்பட்டது.

அதனை அடுத்து அப்பகுதியினர் விவசாய நடவடிக்கை மற்றும் கால் நடைகளின் மேய்ச்சல் நிலமாக அப்பகுதியினை பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையிலையே அப்பகுதியில் இருந்து குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

## பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியக அதிகாரிகள் 13 பேருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பணியகத்தில் பணிப்புரிந்த 13 அதிகாரிகளும் அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கொழும்பு பிரதம நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் குறித்த 13 அதிகாரிகளும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கனடிய உயர் விருதை பெற்ற இலங்கைத் தமிழர்

கனடிய பாதுகாப்புப் படையில் 22 ஆண்டுகள் நற்பணி ஆற்றியமைக்காக, கனேடிய பாதுகாப்புப் படைத் தலைமையக முதுநிலை நிதியியல் நிர்வாகியும் இலங்கைத் தமிழரான மதியாபரணம் வாகீசன் கனடிய உயர் விருதை பெற்றுள்ளார்.

கடனாவின் உயர் மதிப்புறு விருதான Canadian Forces' Decoration (CD) First Clasp என்ற விருதினை அவருக்கு வழங்கி, பாராட்டி கௌரவித்துள்ளனர்.

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான மதியாபரணம் வாகீசனுக்கு (1988ம் ஆண்டு உயர்தரம்) கல்லூரி நிர்வாகம் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

குறித்த உயர்மதிப்பைப் பெற்றுக் கொண்ட முதல் இலங்கைத் தமிழ் கனடியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈஸ்டர் தாக்குதலுக்கு முன்னர் ஹிஸ்புல்லாவின் BOC கணக்குகளில் 4 பில்லியன் வெளிநாட்டு நிதி!



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முன்னர் மூன்று ஆண்டுகளுக்குள் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா சொந்தமான இரு இலங்கை வங்கி கணக்கில் 4 பில்லியனுக்கும் அதிகமான வெளிநாட்டு நிதி பரிமாற்றம் இடம்பெற்றுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களை விசாரிக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் குறித்த விடயம் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் நேற்று சாட்சியம் வழங்கியுள்ள இலங்கை வங்கியின் கொள்ளுபிட்டி கிளையின் முன்னாள் முகாமையாளர் ஐ.சி.கே. கண்ணங்கரா, குறித்த வாங்கி கிளையில் ஹிஸ்புல்லா 5 கணக்குகளை வைத்திருந்ததாக கூறியுள்ளார்.

ஹிஸ்புல்லாவால் இயக்கப்படும் ஐந்து வங்கிக் கணக்குகளில் ஹிரா அறக்கட்டளை மற்றும் மட்டக்களப்பு வளாக தனியார் லிமிடெட் என்ற இரண்டு கணக்குகள் தொடர்பான விபரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

குறிப்பாக இலங்கை ஹிரா அறக்கட்டளை கணக்கு பதினைந்து சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு நிதிகளும் மட்டக்களப்பு வளாகம் தனியார் லிமிடெட் கணக்கிற்கு 2016 மற்றும் 2019 க்கு இடையிலான காலகட்டத்தில் ஏழு சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு நிதி கிடைத்துள்ளது.

மத்திய வங்கியில் உள்ள நிதி பரிவர்த்தனை ஒழுங்குமுறைச் சட்டத்தின் படி, ஒரு மில்லியனுக்கும் அதிகமான தொகையைப் பெறும் கணக்கில் பரிவர்த்தனைகள் மத்திய வங்கியில் தெரிவிக்கப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், ஹிஸ்புல்லாவால் இயக்கப்படும் இவ்வளவு பெரிய தொகைகள் சம்பந்தப்பட்ட பரிவர்த்தனைகள் தொடர்பான விவரங்களையோ அல்லது இந்த பரிவர்த்தனைகள் சந்தேகத்திற்குரியவை என்றோ இலங்கை வங்கி கண்டுபிடிக்கவில்லை என்றும் தலைமை அலுவலகம் தெரிவித்ததாக அவர் சாட்சியமளித்தார்.

இருப்பினும், உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு, இந்த பரிவர்த்தனைகள் சந்தேகத்திற்குரியவை என்று இலங்கை வங்கி, மத்திய வங்கிக்கு அறிக்கை அளித்திருந்தது அதன்படி மத்திய வங்கி நிதி மோசடி புலனாய்வு பிரிவில் முறைப்பாட்டினை வழங்கியது.

முதல் கணக்கு, இலங்கை ஹிரா அறக்கட்டளை, 1993 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 18 அன்று சமூக சேவை கணக்காக திறக்கப்பட்டது என்று சாட்சி கூறினார்.

கணக்கைத் திறந்த ஒரு மாதத்திற்குப் பின்னர் அதாவது 1993 செப்டம்பரில் சமூக சேவைகள் திணைக்களத்தில் பதிவு சான்றிதழை வங்கி பெற்றுள்ளது என்றும் சாட்சி கூறினார்.

முன்னதாக, சமூக சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்காக ஹிஸ்புல்லா போலி ஆவணங்களை சமர்ப்பித்திருந்தார் என்றும் அண்மையில் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்கப்பட்டது.

ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின்படி, ஹிஸ்புல்லாவின் இலங்கை ஹிரா அறக்கட்டளை கணக்கு 2016 முதல் 2019 க்கு இடையில் பதினைந்து பரிவர்த்தனைகள் மூலம் 313 மில்லியன் கிடைக்கப் பெற்றுள்ளது.

இரண்டாவது கணக்கிற்கு, மட்டக்களப்பு வளாகம் தனியார் லிமிடெட்க்கு 2016 செப்டம்பர் 09 அன்று வங்கிக் கணக்கு திறக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கு 2016 -2019 காலத்திற்குள் 3.6 பில்லியன் ரூபாய் வெளிநாட்டு நிதி கிடைத்ததாகவும் இலங்கை வங்கியின் கொள்ளுபிட்டி கிளையின் முன்னாள் முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

# நேற்று 337 பேருக்கு கொரோனா


File Photo

இலங்கையில் நேற்றைய தினம் (திங்கட்கிழமை) அடையாளம் காணப்பட்ட 337 கொரோனா தொற்று நோயாளிகள் தொடர்பான அறிவிப்பினை சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அந்தவகையில் நேற்று அடையாளம் காணப் பட்டவர்களில் அதிகளவிலானோர் அதாவது 189 பேர் கொழும்பு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்றும் 47 பேர் கம்பஹாவை சேர்ந்தவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புத்தளம் மற்றும் நுவரெலியாவைச் சேர்ந்த தலா 11 பேரும் கண்டியைச் சேர்ந்த 08 பேரும் அதில் அடங்குவதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் களுத்துறை மற்றும் குருநாகலைச் சேர்ந்த 06 பேரும் இரத்தினபுரியைச் சேர்ந்த 03 பேரும் அடங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு பொலன்னறுவை, அனுராதபுரம் காலி மற்றும் கிளிசொச்சியில் தலா ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ள அதேவேளை 33 பேர் பொலிஸ் அதிகாரிகள் என்றும் அறி விக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பிய இருவரும் அடங்குகின்றனர்.

இந்நிலையில் நாட்டில் இதுவரை கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 20 ஆயிரத்து 508 ஆக உயர்ந்துள்ளது.

இதில் 14 ஆயிரத்து 497 பேர் குணமடைந் துள்ளதுடன் 5 ஆயிரத்து 921 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 90 பேர் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா தொற்று: மக்களுக்கு 7 பில்லியன் ஒதுக்கீடு

கொரோனா தொற்று நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள 1.4 மில்லியன் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க கிட்டத்தட்ட 7 பில்லியன் ரூபாயினை ஒதுக்கியுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று (செவ்வாய்க் கிழமை) விசேட ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல, கொழும்பு மற்றும் கம்பஹாவில் வசிப்பவர்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என கூறினார்.

கொரோனா நெருக்கடியால் பொதுமக்கள் மற்றும் நாட்டின் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள போதிலும், அரசாங்கம் அனைத்து அபிவிருத்தியையும் மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

அத்தோடு நாட்டின் அனைத்து துறைகளும் படிப்படியாக இயல்பு நிலைக்கு திரும்புவதாகவும் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல் குறிப்பிட்டார்.

# 1000க்கும் மேற்பட்ட பொலிஸாருக்கு கொரோனா

இலங்கையில் 1000க்கும் மேற்பட்டோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளதாக கொவிட் 19 ஒழிப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 1,039 பொலிஸ் அதிகாரிகளுக்கு இதுவரை கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்நிலையம் தெரிவித் துள்ளது.

இதில், 238 பேர் பொலிஸ் விசேட அதிரடைப் படையினர் எனவும் கொவிட் 19 ஒழிப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் சுட்டிக் காட்டியுள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 20 ஆயிரத்து 508 ஆக உயர்ந்துள்ளது.

இதில் 14 ஆயிரத்து 497 பேர் குணமடைந் துள்ளதுடன் 5 ஆயிரத்து 921 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 90பேர் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அக்குறணையில் இரு கிராம சேவகர் பிரிவுகள் முடக்கம்

அக்குரணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் இரண்டு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவிற்கு இன்று முதல் நடமாட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் சிலருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டமையை அடுத்தே இவ்வாறு நடமாட்டக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அக்குரணையில் இதுவரை 39 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தெற்கிலிருந்து...

மீட்கப்பட்ட உணவகத்தை உடனடியாக தமது பாதுகாப்பின் கீழ் கொண்டு வந்த யாழ்ப்பாண பொலிசார் உணவகத்தில் பணியாற்றும் எவரையும் உணவகத்தை விட்டு வெளியேற அனுமதிக்கவில்லை.

அதேவேளை சடலம் யாழ்.போதனா வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளது. அத்துடன் பி.சி.ஆர். பரிசோதனையும் முன்னெடுக்கப்படவுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

## பொலிஸ் கொத்தணி...

மேலும் 35 கொரோனா நோய்த் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, இதுவரை கொவிட்-19 தொற்றுக்குள்ளான சிறைக் கைதிகளின் எண்ணிக்கை 717 ஆக அதிகரித்துள்ளதாக, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

## அச்சுறுத்தும்...

இது குறித்த மேலதிக வானிலை தொடர்பான தகவல்களை வளிமண்டலவியல் திணைக்களம் திணைக்களத்தின் வானிலை அதிகாரி மொஹமட் சாலிஹீன் தருகிறார்.

இதேவேளை, கடந்த 24 மணி நேரத்தில் கடும் மழை காற்றின் தாக்கத்தின் காரணமாக பருத்தித்துறை மற்றும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 17 குடும்பங்களைச் சேர்ந்த 53 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் என் சூரியராஜ் இதனை தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி...

லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் காணாமல் போனமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் முன்னாள் பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது.

யுத்தத்தின் பின் மக்கள் போராட்டங்களை ஒழுங்கமைத்து வந்த செயற்பாட்டாளர்களான இவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பாக அவர்களின் உறவினர்களால் ஆள்கொணர்வு மனு 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இதனை அடுத்து அந்த விசாரணைகள் யாழ். நீதவான் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகியிருந்த நிலையில் சாட்சியம் ஒன்றினை பெற்றுக்கொள்ள கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி...

அவர்களை தனிமைப்படுத்தி பிசிஆர் பரிசோதனை நடத்தவும் சுகாதாரத் துறையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த “கிளிநொச்சி 55ஆம் கட்டையில் உள்ள ஒயில் கடையில் பணியாற்றும் முதியவர் ஒருவர் நேற்றுமுன்தினம் காய்ச்சல் என்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவருக்கு கோரோனா தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவரது மாதிரிகள் பெறப்பட்டு பிசிஆர் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன.

அவருக்கு கோரோனா தொற்று உள்ளமை பிசிஆர் பரிசோதனையில் நேற்றுத் திங்கட்கிழமை மாலை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவரது கடையில் பாரவூர்திகள் மற்றும் டிப்பர் வாகனங்களின் சாரதிகள், உதவியாளர்கள் ஒயில் வாங்குவதற்கு வந்து செல்கின்றனர். அவர்களில் ஒருவரால் வயோதிபருக்கு கோரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது.

இந்த நிலையில் குடிதண்ணீர் போத்தல்களை மேல் மாகாணத்திலிருந்து எடுத்து வந்து கிளிநொச்சியில் விநியோகிக்கும் அந்த மாவட்டத்தில் வசிக்கும் இருவர் தொடர்பில் சுகாதாரத் துறையினரால் கண்டறியப் பட்டுள்ளது.

அவர்கள் முதியவரின் கடைக்கு வந்து செல்வதால் அவர்களை தனிமைப்படுத்தி பிசிஆர் பரிசோதனையை நடத்த சுகாதாரத் துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## பிணையில்...

மேலும், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்த ராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப்புலனாய்வு உத்தியோகஸ் தரான எம்.கலீல், முன்னாள் இராணுவ சிப்பாயான மதுசிங்க (வினோத்) ஆகியோரையும் தலா 2 சரீரப்பிணையில் மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் பிணையில் விடுவித்துள்ளது.

பிள்ளையான் உள்ளிட்ட ஏனைய சந்தேகநபர்கள், மட்டக்களப்பு மேல் நீதிமன்ற விசேட நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் இன்று (செவ்வாய்க்கிழமை) முன்னி லைப்படுத்தப்பட்டனர்.

இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட ஐவரின் பிணை மனு கோரிக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த பிணை மனுவினை ஆராய்ந்த மேல் நீதிமன்ற விசேட நீதிபதி டி.சூசைதாசன், அவர்கள் அனைவருக்கும் பிணை வழங்கி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மேலும், குறித்த வழக்கு விசாரணைகளை எதிர்வரும் டிசம்பர் 8ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்படும் எனவும் நீதிபதி அறிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பாகவே சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட ஐவரும் சந்தேகத்தின் பேரில் கடந்த 2015 ஆண்டு கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போர்க்குற்றம்...

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகரவிடம் எழுப்பிய கேள்வியையடுத்து இன்று காலை இரு தரப்பினருக்கும் இடையில் கடுமையான சொற்போர் இடம்பெற்றது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சரத் வீரசேகர, “பரணகம ஆணைக்குழுவில் உலகப் பிரசித்தி பெற்ற ஆறு போர்க் குற்றவியல் நிபுணர்கள் இடம்பெற்றிருந்தார்கள். போர்க் குற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்பதை அவர்கள் கூறியிருந்தார்கள். அதற்குப் பின்னரும் எதற்காக இதனைக் கேட்கின்றீர்கள்? இந்த மக்கள் துன்பப்பட்ட போது நீங்கள் எங்கே நின்றீர்கள்? நீங்கள் ஒருபோதுமே போர்க் களத்தில் இருக்கவில்லை” எனத் தெரிவித்த போது கஜேந்திரகுமார் குறிக்கிட்டார்.

“போரின் இதிக்காலத்தில் நான் இங்குதான் நின்றேன். உங்களுடைய பிரதமருடைய சகோதரர் பஸில் ராஜபக்ஷ வுடன் தொடர்பில் இருந்தேன். உங்களால் இறுதியாகக் கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுடைய உயிர் களைப் பாதுகாப்பதற்காக அவருடன் தொடர்புகொண் டிருந்தேன். தமிழ் மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்காக பஸில் ராஜபக்ஷவுடன் பேசிக்கொண்டிருந்தேன்” என கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

இதன்போது இரு தரப்பினருக்கும் கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றது.

# மாவீரர் நாள் வழக்கு யாழ். நீதிமன்றில் ஒத்திவைப்பு

## நாளை மூத்த பிரதி மன்றாடியார் அதிபதி முன்னிலையாவார்




மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு தடை விதிக்கக் கோரும் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரின் விண்ணப்பம் மீதான விசாரணை நாளை 25ஆம் திகதி புதன்கிழமை வரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலங்கை தண்டனைச் சட்டக் கோவை 106ஆம் பிரிவின் கீழ் பொதுத் தொல்லை என்ற வியாக்கியனத்தின் கீழ் இந்த விண்ணப்பத்தை யாழ்ப் பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் தாக்கல் செய்தனர்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட இடங்களில் நினைவேந்லை நடத்தவுதற்கு தடை கேட்டும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறிதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகள் வி.மணிவண்ணன், க.சுகாஷ், மாநகர சபை உறுப்பினர்கள் வரதாசா பார்த்திபன், மயூரன் உள்ளிட்ட 37 பேருக்கு எதிராக தடைக் கட்டளை வழங்குமாறும் இந்த விண்ணப்பம் செய்யப்பட்டது

புலிகள் அமைப்பில் இருந்து உயிரிழந்த உறுப்பினர்களை நினைகூருவதற்காக நவம்பர் 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. அந்த மாவீரர் நாள் நிகழ்வுகளைத் தடுக்கும் வகையில் கட்டளை வழங்கவேண்டும் என்று பொலிஸார் விண்ணப்பத்தில் கேட்டுள்ளனர்.

அத்துடன் கோவிட் -19 தனிமைப்படுத்தல் கட்டளைச் சட்டத்தையும் பொலிஸார் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்தனர்.

பிரதிவாதிகளில் நாடாளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகள் விஸ்வலிங்கம் மணிவண்ணன், கனகரட்ணம் சுகாஷ் உள்ளிட்டோர் கடந்த வெள்ளிக்கிழமை மன்றில் முன்னிலையாகி பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு கடுமையான ஆட்சேபனையை முன்வைத்தனர். அதனை அடுத்து அன்றைய தினம் வழக்கு இன்றைய தினத்திற்கு திகதியிடப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டது.

அந்நிலையில் இன்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, மூத்த சட்டத்தரணி என்.சிறிகாந்தா முன்னிலையாகி நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

இந்த நிலையில் வழக்குத் தொடுனர் சார்பில் மூத்த பிரதி மன்றாடியார் அதிபதி பிரபாகரன் குமாரரட்ணம் இன்று பிற்பகல் மன்றில் முன்னிலையாவார் என்று அரச சட்டவாதியால் அறிவிக்கப்பட்டதற்கு அமைய வழக்கு பிற்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

பிற்பகல் வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்ட போதும் காலநிலை சீரின்மை காரணமாக மூத்த பிரதி மன்றாடியார் அதிபதி நாளைக் காலை மன்றில் முன்னிலையாவார் என்று அரச சட்டவாதி ச.யாதவன் மன்றுக்கு அறிவித்தார்.

அதனால் வழக்கு நாளை முற்பகல் 11 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.



# பல்கலை. வெட்டுப்புள்ளியில் மாணவர்களுக்கு அநீதி!

பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்வதற்கான வெட்டுப்புள்ளியில் மாணவர்களுக்குஅநீதி இழைக்கப்பட்டுள்ளதாக கூறி நுவரெலியாவில் போராட்டமொன்று இன்று (செவ்வாய்க்கிழமை) காலை முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலைகளை பாதுகாக்கும் அமைப்பின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, வெட்டுப்புள்ளிகளை நிர்ணயிக்கின்ற பொழுது உரிய நடைமுறை கடைபிடிக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த போராட்டம் தொடர்பாக பாடசாலைகளை பாதுகாக்கும் அமைப்பின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் ராமராஜ் தெரிவித்துள்ளதாவது, "இறுதியாக நடைபெற்ற க.பொ.த.உயர்தர பரீட்சையானது புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகவும் பழைய பாடத் திட்டத்திற்கு அமைவாகவுமே இரண்டு முறைகளில் நடைபெற்றது.

இதனடிப்படையில் வெட்டுப்புள்ளிகளை நிர்ணயிக்கின்ற பொழுது கடைபிடிக்க வேண்டிய நடைமுறை கடைபிடிக்கப்படவில்லை.

இவ்வாறான ஒரு நிலைமை 2011 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொழுது அந்த சந்தர்ப்பத்தில் சரியான முறையை கையாண்டு, அதற்கான தீர்வு சரியான முறையில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இம்முறை அந்த முறை கடைபிடிக்கப்படவில்லை. அதிகாரிகள் தங்களுக்கு என்ன தோன்றியதோ அதனையே செய்திருக்கின்றார்கள். இதனால் பாதிக்கப்பட்டிருப்பது எங்களுடைய மாணவர்கள்.

இதன் காரணமாக சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு பல்கலைக்கழகங்களுக்கு செல்ல முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேலும் மாணவர்களை இணையத்தின் ஊடாக பதிவு செய்யுமாறு கேட்டிருக்கின்றார்கள். அனைவருக்கும் அந்த வசதி இருக்கின்றதா? என்பது ஒரு கேள்விக் குறியே.

இதன் காரணமாக இன்று மாணவர்கள் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கின்றார்கள். மாணவர்கள் மாத்திரமன்றி அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கின்றார்கள்.

இதன் காரணமாக எதிர்காலத்தில் தேவையற்ற பிரச்சினைகள் உருவாவதற்கான நிலை இருக்கின்றது.

இந்த விடயத்தை நாங்கள் இன்று நுவரெலியாவில் போராட்டம் செய்தது போல நாடு முழுவதும் செய்வதற்கும் தீர்மானித்திருக்கின்றோம்.

இதற்கு உரிய பதிலை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# தந்தை தனிமைப்படுத்தலில் மகள் பாடசாலையில் அரியாலையில் சம்பவம்

யாழ். அரியாலையில் தனிமைப் படுத்தப்பட்ட குடும்பத்திலிருந்து மாணவி ஒருவர் பாடசாலைக்கு சென்ற நிலையில் குறித்த விடயம் சுகாதார பிரிவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதை தொடர்ந்து மாணவி வீட்டுக்கே அனுப்பபட்டதாக கூறப்படுகின்றது.

குறித்த மாணவியின் தந்தை ஒரு பஸ் ஓட்டுனர் எனவும், அவருடைய பேருந்தில் பயணம் செய்த ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில் பஸ் ஓட்டுனர் தனிமைப்படுத்தப் பட்டுள்ளார். இந்நிலையில் அவருடைய பிள்ளை நேற்று பாடசாலைக்கு சென்ற நிலையில் சுகாதார பிரிவினரின் கனவத்திற்கு குறித்த விடயம் கொண்டு செல்லப்பட்தை தொடர்ந்து குறித்த மாணவி வீட்டுக்கு அனுப்பபட்டு வீட்டிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளார்.

# மாவீரர் நினைவு நாள் வழக்குகளை பொலிஸார் மீள் பரிசீலனை செய்யவேண்டும்



மாவீரர் நினைவு நாள் தடைக்கு எதிராக நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பாக பொலிஸார் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என சிரேஸ்ட சட்டத்தரணி ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

யாழில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயெ அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். என். ஸ்ரீகாந்தா மேலும் கூறியுள்ளதாவது, "கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மற்றும் ஊர்காவற்றுறை ஆகிய நீதிமன்றங்களிலும் யாழ்ப் பாண நீதவான் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் தொடர்பிலும் ஏற்கனவே தடை கட்டளை பெறப்பட்ட நீதிமன்றங்களுக்கு முன்னால் உள்ள வழக்குகளிலும் தடை கட்டளைக்கு விண்ணப்பித்து யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் தொடர்பிலும் தங்களது குறித்த விண்ணப்பங்களை மீள பெற்றுக்கொள்வது தொடர்பாக பொலிஸார் சிந்திக்க வேண்டும்.

ஏனெனில் ஒரே நாடு ஒரே சட்டம் என்றதன் அடிப்படையில், நீதிமன்றங்களுக்கு நீதிமன்றங்கள் வித்தியாசமான அணுகுமுறையினை, அரசினை பிரதிநிதித்துவப்படுத்தும் பொலிஸ் தரப்பினர் கையாள முடியாது.

மல்லாகத்தில் ஒரு அணுகுமுறை பருத்தித்துறையில் ஒரு அணுகுமுறை மன்னாரில் இன்னுமொரு அணுகு முறை என்று இருக்க முடியாது.

ஆகவே, இவ்விடயத்தில் முறையாக சிந்தித்து நல்ல முடிவினை பொலிஸார் மற்றும் அரசாங்கம் எடுப்பதற்கு முன்வரவேண்டும்" என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# தமிழகத்தில் படகுடன் கரையொதுங்கிய வல்வெட்டித்துறை இளைஞர்

யாழ். வடமராட்சி, வல்வெட்டித் துறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தமிழகத்தில் கரையொதுங்கியுள்ளார்.

40 கோஸ்பவர் இயந்திரம் பொருத்தப்பட்ட குறித்த படகைத் தமிழகக் கரையோரக் காவல்படையினர் கண்ணுற்று விசாரித்தபோது மீன்பிடிக்க வந்த போது திசைமாறி தமிழகப் பகுதிக்குள் வந்துவிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

தான் வல்வெட்டித்துறை, ஆதிகோயிலடி பகுதியைச் சேர்ந்த விஜயமூர்த்தி கலைச்செல்வன் (வயது 29) என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, குறித்த இளைஞரைக் காணவில்லை என்று வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் குடும்பத்தாரால் ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.